மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 520, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

520—

மயிலாடுதுறை காய்கறி சந்தைக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

*16763— திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான காய்கறி சந்தைக்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி.க.) சந்தையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (Municipal Urban Development Fund) திட்டத்தின்கீழ் ரூ. 20.26 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 இலட்சம் ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் விரைவிலே அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைச சொல்லி இந்தக் கட்டிடம் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கே தள்ளு வண்டிகளிலும் பிளாட்பாரங்களிலும் காய்கறிகளை விற்பவர்கள் காய்கறிகளைப் போட்டு விற்கின்ற காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் கூடிய விரைவிலே அந்தக் கட்டிடத்தைக் கட்டி அந்தப் பகுதிக்கு இந்த காய்கறி வியாபாரத்தை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைசசர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மயிலாடுதுறை நகராட்சியிலே இன்றைக்கு அந்த நகரத்தினுடைய வளர்ச்சிக்காகத் தமிழ்

நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக அரசு ஆணை எண் 302 நாள் 13—12—1993 இல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 67 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இதில், நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி. க. சந்தையில் மட்டும் கடைகள் கட்டுவதற்காக 20 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த திரு. வி.க. சந்தையில் கடைகள் கட்டுவதற்குத் தொழில் நுட்ப அனுமதிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இன்றைக்குக் காத்து இருக்கிறது. அந்தத் தொழில் நுட்ப அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இன்றைக்கு டெண்டர்கள் கோரப்பட்டு பணிகள் விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடம்பெறறிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முக்கூடல் அணையிலிருந்து நாகர்கோயில் நகராட்சிப் பகுதிகளுக்கு எட்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விடுவதால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. இரா. அப்பு நடேசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் முக்கூடல் அணையிலிருந்து நாகர்கோயில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் எட்டு நாட்களுக்கு ஒரு முறை விடப்படுவது'' குறித்த அவசரப் பொது முக்கித்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.